137—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***54316—திரு. க.நா. விஜயகுமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் (வடக்கு) தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, பாப்பநாயக்கன்பாளையத்தில் உள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் (வடக்கு) தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, பாப்பநாயக்கன்பாளையத்தில் உள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்பொருள் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.

முற்பகல் 10–05

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே கல்வித் துறையிலே சீரிய பல திட்டங்களைத் தந்து, மறைந்தும் மறையாமலும், மக்கள் மனதில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியிலே, ஏழையெளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் தொடர்ந்து கல்வி பயில இந்த நிதியாண்டிலே 34,182 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரமுயர்த்தி அரசாணை வெளியிட்டு நல்லாட்சி நடத்தி வரும், குடிமராமத்து நாயகர், கொங்கு நாட்டுச் சிங்கம், காவேரியின் காப்பாளர் மாண்புமிகு

2020 மார்ச் 20]

முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு உற்ற துணையாக விளங்கும், தென்பாண்டிச் சிங்கம் மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் ஓ. பன்னீர்செல்வம் அவர்களுக்கும், பள்ளிக் கல்வித் துறையைச் சிறப்பாக வழிநடத்தும், மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருப்பூர் (வடக்கு) சட்டமன்றத் தொகுதியிலே பாப்பநாயக்கன்பாளையம் நடுநிலைப் பள்ளியிலே கிட்டத்தட்ட 417 மாணவ, மாணவிகள் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்தப் பள்ளி 1959 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பள்ளி. இந்தப் பள்ளியிலே படிக்கும் மாணவர்கள் உயர் கல்வி படிப்பதற்கு ஏதுவாக, இந்தப் பள்ளியை இந்த ஆண்டிலேயே உயர்நிலைப் பள்ளியாக மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தரமுயர்த்திக் கொடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற அந்தப் பள்ளி 49 சென்ட் இடத்தில்தான் அமைந்திருக்கிறது. அங்கு 179 மாணவிகள் மற்றும் 145 மாணவர்கள் என மொத்தம் 324 மாணாக்கர்தான் படிக்கின்றனர். எட்டாம் வகுப்பிலே குறைந்தது 50 மாணவ, மாணவிகள் வேண்டுமென்பது அரசின் விதி. ஆனால், 33 மாணவர்கள்தான் அங்கே படிக்கிறார்கள். அந்தப் பகுதி தொழிற்சாலைகளில் வேலை செய்கிற தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாகும். தனியாரிடத்திலே சென்று அவர்களுடைய குழந்தைகள் கல்வி கற்க இயலாத சூழ்நிலை இருக்கிறது என்பதையும் நான் அறிவேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு நான் எடுத்துச் செல்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் (வடக்கு) சட்டமன்றத் தொகுதியிலே, பெருமாநல்லூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை இந்த ஆண்டிலே மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, திருப்பூர் மாநகரப் பகுதியிலே அமைந்துள்ள அனுப்பர்பாளையம் புதூரிலுள்ள இருபாலர் பள்ளியை, இந்த ஆண்டே பெண்களுக்கென்று தனியாகப் பிரித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பள்ளிக்கென்று 10 ஏக்கர் நிலம் உள்ளது. எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவிலே கலந்துகொள்ள மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இரண்டு மாதங்களுக்கு முன், திருப்பூர் (வடக்கு) தொகுதிக்கு வந்தபோது அப்பள்ளியைப் பார்வையிட்டார்கள். இந்த ஆண்டு அந்தப் பள்ளியை ஆண்களுக்கும், பெண்களுக்கும் என்று தனியாகப் பிரித்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, பெருமாநல்லூர் உயர்நிலைப் பள்ளி, பெண்கள் ஏறத்தாழ 3 கிலோ மீட்டர் தொலைவிற்கு பேருந்துகள் இல்லாத இடத்தில் நடந்து சென்று படிக்கின்ற சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு பெண்களுக்காகப் புதிதாகச் சென்ற ஆண்டு உருவாக்கப்பட்டது. இருபாலர் அங்கே படித்து வந்தனர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக அவருடைய கடிதத்தில் பரிந்துரை செய்தார்கள். அதனடிப்படையில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையில் சென்ற ஆண்டு தொடங்கப்பட்டது. பரிந்துரை செய்தது மட்டுமல்ல; நடுநிலைப் பள்ளியின் கட்டடங்கள் பழுதுபார்க்கப்படாமல் இடிக்கப்பட வேண்டிய நிலையில் இருந்தன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அங்கே இருக்கிற நிருவாகப் பொறியாளர்களுக்கு உத்தரவு வழங்கினார்கள். அதனடிப்படையில் புதிதாகப் பொலிவோடு கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, மாணவிகள் நலன் கருதி, பேருந்து வசதியுள்ள இடம், மத்திய

2020 மார்ச் 20]

பகுதியாக இருக்கின்ற இடம், பாதுகாப்பான இடம் என்ற முறையில், உயர்நிலைப் பள்ளியை மட்டும் தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சருடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்செல்லப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர் அவர்கள்.

திரு. R.D. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் தொகுதி, வார்டு எண் 35, கவியரசர் கண்ணதாசன் நகர், 5–வது பிளாக்கில், பழுதடைந்த நிலையிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியைப் பழுதுபார்த்து, சரிசெய்ய அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 முதல் இந்த அரசு இரண்டு முறையாகப் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுவரையில் தமிழ்நாட்டின் வரலாற்றில் இல்லாத அளவுக்கு பல இடங்களிலே மரத்தடியிலே படித்த மாணவர்களுக்கெல்லாம், பொலிவோடு இருக்கின்ற கட்டடங்களைக் கட்டித் தந்திருக்கின்றார்கள். அப்படிப்பட்ட வரலாறு தமிழ்நாட்டில் மட்டும்தான் நடைபெற்றிருக்கிறது. இதை மத்திய அரசே பாராட்டியிருக்கிறது. உங்களது கோரிக்கையையும் கவனத்தில் கொண்டு இந்த ஆண்டு நபார்டு திட்டத்திலே அது இணைக்கப்படும்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள்.

திரு. தூசி கே. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழுக்காகவும், தமிழக மக்களுக்காகவும் ஓடோடி உழைத்து, உறங்க மறந்து, இன்று வங்கக் கடலோரம் உறங்கிக் கொண்டிருக்கின்ற என்னுடைய தாயின் திருவடிகளை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவினுடைய நல்லாசியோடு, இன்று தமிழகத்தை நல்வழியிலே நடத்திச் செல்கின்ற மாட்சிமைப் பொருந்திய, மாண்புகள் நிறைந்த, தமிழகத்தின் தங்க மகன், மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார்

அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு உறுதுணையாகவுள்ள தமிழகத்தின் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் தேனியார் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறு தொகுதி, செய்யாறு வட்டம், அனக்காவூர் ஒன்றியம், சேத்துறை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர, கொரோனா வேகத்தில் செயல்படுகின்ற எங்கள் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது கொரோனா வைரஸ் வேகத்தில் என்று சொன்னார்கள். தமிழ்நாட்டில் மட்டும்தான் அது நுழையாமல் தடுக்கப்பட்டிருக்கிற வரலாறு நடைபெற்றிருக்கிறதே தவிர, வேறு எங்கேயும் இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி கஜா புயல் வந்த வேகத்திலேயே நிவாரணப் பணிகளை ஆற்றி கஜா புயலினை நாம் முறியடித்துக் காட்டினோமோ, அதேபோன்று, ஆற்றல்மிக்க நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இருக்கின்ற இந்த அரசு எங்கே கொரோனா வைரஸ் பரவினாலும் இங்கே, தமிழ்நாட்டிலே அதைத் தடுத்துக் காட்டும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று வேண்டுகோள் வைத்திருக்கிறார். தூசி படியாமல் மாணவர்கள் செல்ல வேண்டுமென்று அவர் கருதுகிறார். அதை இந்த அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 138, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.